முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1527

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.12.2023,** திங்கட்கிழமை

1. சரவணச்சுடரேற்றி உலகெங்கும்
   சற்குருவாய் அற்புதம் நடத்துகின்ற
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சோபகிருது தேள் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 ம் நாள், 04.12.2023, திங்கட்கிழமை)
   தன்னிலே அரங்கன் சக்திபலம்
   தரணி எங்கும் தர்ம பலமாக மாறி
3. இன்னலை போக்கும் ஞானப்படைகளாக
   எங்கும் தொண்டர் படை பெருகி வர
   வருகவே அரங்கன் வழி உலகம்
   வையகத்தில் பெருமாற்றம் காணக்கூடும்
4. தருகின்ற அரங்கன் தர்மவான்கள் படை
   தரணி எங்கும் நிரம்பி இனிதே
   இனிதே உலகமாற்றம் நிகழ்த்தக்கூடும்
   இயல்பாக இந்த பெருமாற்றத்தை
5. இறங்கி ஆறுமுகன் யான்
   உலகமெங்கும் நடத்த இருக்க
   வரமாக உலகோர் அனுகி அரங்கன்
   வையகத்தில் கரம்பட தீட்சை ஏற்று
6. தீட்சை ஏற்று உலகில் ஞானம் பயின்றால்
   தொடர்ந்து அன்னதான சேவை புரிந்தால்
   மாட்சிமையாக உலகமெங்கும் அற்புதத்தை
   மகான் சுப்ரமணியர் யானும் இறங்கி அருள்புரிவேன்

7. அருளாக ஆற்றலாக அறத்தின் வேலியாக
பொருளாக உலக பொருள் வளமுமாக
புண்ணியமும் ஆக அரங்கன்
அவதாரம் நடத்தி இருக்க

8. இருக்கவே அரங்கன் தொண்டர்களென இனி அடையாளம் கொண்ட மக்களெல்லாம்
கருத்தாக உலகமெங்கும் நிரம்பி இனிதே கலியுகத்தை மாற்றும் மகா சக்தியாக உருவெடுப்பர்
ஆகவே அரங்கன் குடில் நோக்கி வர
அகிலத்துக்கே அற்புதம் சடுதி நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—